ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2285/19 - 2022 ජුනි මස 24 වැනි සිකුරාදා - 2022.06.24

*2285/19 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிமுறைகள்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகள் ஆகும்.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
*தேசிய கொள்கைகள் அமைச்சர்.*

நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, யூன் மாதம் 23 ஆந் திகதி.


1A - G 37006 — 456 (2022/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்கு விதிமுறைகள்

1. இவ் ஒழுங்கு விதிகள் **"2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கொடுப்பனவு முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்"** என அழைக்கப்படுகின்றது.

2. 2022 ஆம் ஆண்டின் மே மாதம் 31 ஆந் திகதிய 2282/22 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள், இதன் மூலம் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

3. 2022 ஆம் ஆண்டின் மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் 04 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதிகளை மாற்றி கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு வாசிக்கப்பட்ட வேண்டும்.

4. 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட விஷேட அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கொடுப்பனவு முறையினை வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 02 ஆந் திகதிய 1739/3 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் 03 (I) (ஆ) ஒழுங்கு விதியினை திருத்தி அமைக்கப்படுவதோடு, திறந்த கணக்குகள் முறை அல்லது பொருட்கள் விற்பனையின் பின்னர் பணக் கொடுப்பனவு அடிப்படை போன்ற கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதி கிடைக்கப் பெறுவது

அ) அவர்களது ஏற்றுமதி நோக்கங்ளுக்காகத் தேவையான பொருட்கள் இறக்குமதிக்காக

(i) அவர்களது வியாபார வெளிநாட்டு நாணய நிதிக் கணக்கு (BFCAs) அல்லது கரைகடந்த வங்கி அலகின் (OBU) நடாத்திச் செல்கின்ற கணக்குகளில் உள்ள ஏற்றுமதியினால் ஈட்டுகின்ற வருமானம்

அல்லது

(ii) அவர்களது வெளிவாரி வர்த்தகக் கணக்குகளில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இலங்கைக்கு வெளியே வசிக்கின்ற நபர் ஒருவரின் (அதாவது வெளிநாட்டுக் கடன்கொடுநர்கள்) பெற்றுக் கொள்கின்ற வெளிநாட்டு நிதிக் கடன்

அல்லது

(iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட வெளிநாட்டு அந்நியச் செலாவணி சட்டத்தின் கீழ் (FEA) வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் பிரகாரம் செயற்பாட்டு மூலதனத் தேவைக்காக (அதாவது குறுங்கால கடன் பெறல்) வெளிநாட்டுக் கடன் கொடுநர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை

அல்லது

(iv) வெளிநாட்டு அந்நியச் செலாவணி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் முதலீட்டாளர் மூலம் திறக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற தன்னுடைய விஷேட வெளிநாட்டு நாணய நிதிக் கணக்கிற்கு (SFCA) செயற்பாட்டு பகுதி மூலதனமாக பங்கு முதலீடாக முதலீட்டாளர் மூலம் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நாணய நிதி மூலம் கொடுப்பனவினை செய்கின்ற ஏற்றுமதியாளர்களுக்காக

(ஆ) அவ் ஏற்றுமதியாளர்களுக்காக பொருட்கள் வழங்கப்படுகின்ற, வெளிநாட்டு நாணய நிதியின் மூலம் கொடுப்பனவினைப் பெற்று அதன் விநியோகத்திற்காக அவ்வாறு தன்னுடைய

**i.** வர்த்தக வெளிநாட்டு நாணய நிதிக் கணக்கு (BFCAs) அல்லது கடல் கடந்த வங்கிப் பிரிவினால் (OBU) பராமரித்துச் செல்லப்படுகின்ற கணக்கிற்கு அவ்வாறு கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நிதி

அல்லது

**ii.** மேலே குறிப்பிடப்பட்ட (அ) (ii), (iii) மற்றும் (iv) ஆவது பந்திகளின் ஒதுக்கீடுகளின் பிரகாரம் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நிதியின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானங்களினால் கொடுப்பனவுகளைச் செய்கின்ற உள்நாட்டு வழங்குநர்களின் தொகுதி (மறைமுக ஏற்றுமதியாளர்கள்) களுக்காக

இ - உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதி குறைந்த பட்சம் 30% அல்லது அதற்கு மேற்பட்ட தனது உற்பத்திகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டில் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பினும் மூலப் பொருட்களாக தேவையான பொருட்கள் அவ்வாறான பொருட்களை இலங்கையின் எந்தவொரு துறைமுகத்திற்கு/ விமான நிலையத்திற்கு வந்தடையும் முன்னர் கைத்தொழில் அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற சிபாரிசினை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்திற்கு படிந்து இறக்குமதி செய்யப்படுகின்ற உள்நாட்டு உற்பத்தியாளர்கள்

ஈ- 2022 ஆம் ஆண்டின் யூலை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள், இவ் ஒழுங்கு விதிகளில் I உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அத்தியவசிய உணவுப் பண்டங்கள் (பொருட்கள்),அப்பொருட்கள் இலங்கைத் துறைமுகத்திற்கு /விமான நிலையத்திற்கு வந்திறங்க முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் கீழ் ,இறக்குமதி செய்யப்படுகின்ற இறக்குமதியாளர்களுக்கு மாத்திரமே.

இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் (4 (ஈ)) இவ் ஒழுங்கு விதிகளின் கீழ் பொருட்கள் இறக்குமதி தொடர்பான விபரங்கள் /(இறக்குமதியாளர்களின் /சரக்குரிமையாளர்களின் பெயர், பொருட்களில் HS குறியீடு மற்றும் விபரங்கள், இறக்குமதியின் அளவு மற்றும் CIF பெறுமானம்) ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையும் வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. மேலே திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 4(அ) ஒழுங்கு விதியின் நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கியினால் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படுகின்ற ஏற்றுமதியாளர்களின் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் ஒழுங்கு விதிகளில் 5 மற்றும் 6 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதிகளில் இருந்து விடுவிக்கப்படுகின்றது.

5. மேலே திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 4(ஆ) ஒழுங்கு விதியின் நிபந்தனைகளில் இலக்கம் 4(ஆ) இல் காட்டப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய நிதிக் கணக்கு ஒன்று அல்லது பலவற்றை நடாத்திச் செல்வதாக உறுதிப்படுத்தி அவருடைய வங்கி (யை) இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு காலாண்டு அடிப்படையில் வெளியேற்றுவதற்காக சமர்ப்பிக்கப்படும் அடிப்படையின் பேரில் அதன் ஒழுங்கு விதிகளில் 5 மற்றும் 6 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதிகளில் இருந்து விடுவிக்கப்படுகின்றது.

6. இவ் ஒழுங்கு விதிகளை வினைதிறன் மிக்கதாக செயற்படுத்துவதனை முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வர்த்தக வங்கிகளுக்குப் பொருத்தமான “செயற்பாட்டு ஆலோசனைகள்” ஐ வழங்க வேண்டும்.

7. மேலே உள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணான வகையில் இறக்குமதிகளை மேற்கொள்ளப்பட்ட போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.எவ்வாறாயினும், இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேலே திருத்தஞ் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைமைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 4(இ)கு முரணாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஓர் இறக்குமதி தொடர்பில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

I உப அட்டவணை

| | I ஆவது நிரல்<br>ஒருங் கிணைந்த வகைப் படுத்தல் குறியீட்டுத் தலைப்பு | II ஆவது நிரல்<br>ஒருகிணைந்த வகைப் படுத்தல் குறியீடு | | III ஆவது நிரல்<br>விபரம் | IV ஆவது நிரல்<br>திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது. (OAP) |
|---|---|---|---|---|---|
| 1 | 03.05 | | | **உலத்திய உப்பிட்ட அல்லது உப்பு நீரில் இடப்பட்ட, புகையூட்டப்பட்ட மீன், புகையூட்டப்பட்ட நிலையிலோ அல்லது முன்னரோ சமைக்கப்பட்டதோ, அல்லது சமைக்கப்படாததோ, மனித உணவுக்குத் தகுந்த மீன் மா, தூளும், மீன் சிறு உருண்டைகளும்:** | |
| | | | - | உலர்த்திய மீன், உண்ணத்தகு மீன் கழிவுகள் நீங்கலாக , உப்பிடப்பட்டதோ அல்லது உப்பிடப்படாததோ ஆயினும் புகையூட்டப்படாதவை: | |
| | | 0305.54.00 | -- | ஹெரிங் எனும் பெருங்கடல் மீன்வகை (குளுபியா ஹரங்கஸ், குளுபியா பல்லசி), நெத்திலி மீன் வகைகள்(என்கிரலிஸ் இன), பதனச்சிறுகுடல் மீன்வகை(சாடினா பில்சாதஸ், சார்டினோபொஸ் இன), சார்டினெல்லா(சார்டினெல்லா இன), நோர்வே நாட்டுக்குரிய சிறு மீன்வகை அல்லது அயிரை போன்ற சிறு உணவு மீன்வகை(ஸ்பிறாடஸ், ஸ்பிறாடஸ்), மெகரல் எனும் மீன் வகை(ஸ்கொம்பர் ஸ்கொம்பஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசிசஸ், ஸ்கொம்பர் ஜபோனிகஸ்), இந்திய மெகரல் மீன்கள் (றஸ்ற்ரெலிங்கர் இன.), சீயர் மீன்கள்(ஸ்கொம்பரோமோரஸ் இன.) ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் மீன் (ட்றச்ரஸ் இன.), ஜெக்ஸ், கிறவல்ஸ்(கரன்க்ஸ் இன.), கோபியா(ரசிசென்ரன் கனாடம்), வெள்ளி நிற வவ்வல் மீன்கள்(பம்பஸ் இன.), பசிபிக் சவுரி (கொலோலாபிஸ் சயிரா), ஸ்கட் மீன்கள்(டெகப்ரெரஸ் இன.), கெப்லின் (மல்லோடஸ் வில்லோசஸ்), வாள் மீன்(எக்சயிபியஸ் கிளாடியஸ்), கவகவா மீன்(யுதைனஸ் எப்பினிஸ்), பொனிரொஸ் (சாடா இன.), மர்லின் மீன்கள், சயில் மீன்கள், ஸ்பியர் மீன்கள் (இஸ்தியோபோறைடி | |
| | | 0305.54.10 | --- | நெத்தலி | OAP |
| | | | | | |
| 2 | 04.02 | | | **பாலும், பாலேடும் செறிவாக்கப்பட்டவை, சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்பட்டவை.** | |
| | | | | | |
| | | | - | மாவாகவும், பால் குறுணிகளாகவும் அல்லது வேறு திண்ம நிலையாகவும் உள்ளவை, நிறையளவில் 1.5% இற்கு மேற்பட்ட கொழுப்பினைக் கொண்டவை. | |
| | | 0402.21.00 | -- | சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்படாதவை. | OAP |
| | | | | | |
| 3 | 07.01 | | | **உருளைக்கிழங்கு, புதியவை அல்லது குளிரூட்டப்பட்டவை.** | |
| | | 0701.90.00 | - | ஏனையவை | OAP |
| | | | | | |

| | I ஆவது நிரல் ஒருங் கிணைந்த வகைப் படுத்தல் குறியீட்டுத் தலைப்பு | II ஆவது நிரல் ஒருகிணைந்த வகைப் படுத்தல் குறியீடு | | III ஆவது நிரல் விபரம் | IV ஆவது நிரல் திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது. (OAP) |
|---|---|---|---|---|---|
| 4 | 07.03 | | | **வெங்காயங்கள், சலொற் வெங்காயங்கள், உள்ளி லீக்ஸ் மற்றும் பிற அலியேசியஸ் மரக்கறி வகை, புதியவை அல்லது குளிரூட்டியவை.** | |
| | | 0703.10.00 | - | வெங்காயங்கங்களும் சலற் வெங்காயங்களும்: | |
| | | 0703.10.20 | --- | பெரிய வெங்காயங்கள் | OAP |
| | | | | | |
| 5 | 07.13 | | | **உலர்த்திய அவரை இன மரக்கறி வகைகள், கோது நீக்கியவை, தோல் நீக்கப்பெறாதவை அல்லது பிளக்கப்பட்டவை அல்லது இரண்டும் செய்யப்படாதவை.** | |
| | | 0713.10.00 | - | பட்டாணிக் கடலைகள் (பைசம் சற்றைவம்) | |
| | | 0713.10.20 | --- | பிளக்கப்பட்டவை | OAP |
| | | 0713.40.00 | - | பருப்புகள் | |
| | | | --- | மைசூர் பருப்பு (சிவப்புப் பருப்புகள்) முழுமையான அல்லது உடைக்கப்பட்ட | |
| | | 0713.40.11 | ---- | முழுமையானவை | OAP |
| | | | | | |
| 6 | 09.04 | | | **வைப்பர் இனத்து மிளகு : உலர்த்திய அல்லது நசுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட கப்சிக்கம் இன அல்லது பிமென்ரா இனத்தவை.** | |
| | | | - | கப்சிக்கம் இனத்து அல்லது பிமென்ரா இனத்துப் பழங்கள் : | |
| | | 0904.21.00 | -- | உலர வைக்கப்பட்டவை, நசுக்கப்பட்டவையோ அல்லது அரைக்கப்பட்டவோ அல்ல. | |
| | | 0904.21.10 | --- | மிளகாய் | OAP |
| | | | | | |
| 7 | 10.06 | | | **அரிசி** | |
| | | | --- | பச்சை அரிசி | |
| | | 1006.30.19 | ---- | பிற (பச்சையரிசி) | OAP |
| | | | --- | குத்தரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | |
| | | 1006.30.29 | ---- | பிற (நாடு மற்றும் சம்பா) | OAP |
| | | | | | |
| 8 | 11.01 | | | **கோதுமை அல்லது மெஸ்லின் மா** | |
| | | 1101.00.10 | --- | கோதுமையினால் | OAP |
| | | | | | |
| 9 | 17.01 | | | **கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் (+)** | |

| | *I ஆவது நிரல்*<br><br>*ஒருங்கிணைந்த வகைப் படுத்தல் குறியீட்டுத் தலைப்பு* | *II ஆவது நிரல்*<br><br>*ஒருகிணைந்த வகைப் படுத்தல் குறியீடு* | | *III ஆவது நிரல்*<br><br>*விபரம்* | *IV ஆவது நிரல்*<br><br>*திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது. (OAP)* |
|---|---|---|---|---|---|
| | | 1701.99.00 | -- | பிற: | |
| | | 1701.99.10 | --- | 99.70 இற்கு மேற்பட்ட அல்லது சமனான துருவப் பெறுமானம் கொண்ட (ICUMSA பெறுமானம் <=60) கரும்புச் சீனி | OAP |